



விளையாட்டை மாபெரும் இயக்கமாக நம்முடைய திராவிட மாடல் அரசு முன்னெடுத்து வரும் நிலையில், அரசு ஆரம்பப் பள்ளிகளுக்கென முக்கியத்துவம் கொடுத்து விளையாட்டு மேம்பாட்டு துறையின் ஒருங்கிணைப்பில் “ஓடி விளையாடு உடற்கல்வித் திட்டம்” செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் இரண்டாம் பகுதியை விழுப்புரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் தொடங்கி வைத்தார்கள். மாவட்ட ஆட்சியர் சி.பழனி, விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் அன்னியூர் அ சிவா, டாக்டர் இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா. ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், தமிழ்நாடு மல்லர் கம்ப சங்கத்தலைவர் உலகதுரை, மாவட்ட துணைச் செயலாளர் தயா இளந்திரையன், நகரச் செயலாளர், மல்லர் கம்ப மாவட்ட தலைவர் துரை செந்தில்குமார், நகரச் செயலாளர் இரா.சக்கரை, நகர மன்றத் தலைவர் தமிழ்ச்செல்வி பிரபு, துணைத் தலைவர் சித்திக் அலி, அனைத்து விளையாட்டு கழகங்களின் ஒருங்கிணைப்பாளர் வாலிபால் மணி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





திருப்பூர் தெற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் தாராபுரத்தில் கலைஞர் நூற்றாண்டு நினைவு நூலகத்தினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் வரவேற்பு உரையில் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி, திருப்பூர் தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மு.ஜெயக்குமார் ஆகியோர் முன்னிலையில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர், கழக இளைஞர் அணி துணை செயலாளர் இ.கே.பிரகாஷ் திறந்து வைத்தார். இதில் தாராபுரம் நகர கழக செயலாளர் சு.முருகானந்தம் உள்பட மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### கரூர் மாவட்டத்தில்

# நெசவாளர்களின் வாழ்வை மேம்படுத்த 10 சிறிய அளவிலான கைத்தறி ஜவுளி பூங்கா!

## அமைச்சர்கள் வி.செந்தில்பாலாஜி - ஆர். காந்தி ஆய்வு !

கரூர், நவ.14.

மின்சாரம். மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி, கைத்தறி துணி நூல் அமைச்சர் ஆர்.காந்தி ஆகியோர் கரூர் மாவட்டம் கோடாங்கிப்பட்டி, காக்காவாடி பகுதிகளிலுள்ள தனியார் ஜவுளி பூங்காக்களில் மேற்கொள்ளப்பட்டுவகும் கட்டுமானம் மற்றும் புணரமைப்பு பணிகளை ஆய்வு செய்தனர்.

பின்னர் கைத்தறி துணி நூல் அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் மு.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள நெசவாளர்கள் மற்றும் ஐவுளித் துறையினருக்காக எண்ணற்றத் திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக கரூர் மாவட்டத்திலுள்ள நெசவாளர்கள் தொழிலை மேம்படுத்துவதற்காக 2023-24 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் கைத்தறி துறை சார்பாக தமிழ்நாட்டில் 10 சிறிய அளவிலான கைத்தறி பூங்காக்கள் தலா ரூ.200 கோடி செலவில் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

கரூர் சரகத்தில் 43 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகிறது. சங்க உறுப்பினர்களை கொண்டு உள்ளூர் உற்பத்தி இரகங்களான பெட்ஷீட் தலையணை உறை, துண்டு, மற்றும் ஏற்றுமதி இரகங்களான எம்பிராய்டரி குஷன் கவர், பீச் மேட், குல்ட், பாய் மெத்தை பை ஆகிய இரகங்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. இவற்றில் கோஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு ஆண்டுதோறும் ரூ.43.00 இலட்சம் வரையிலான இரகங்கள் கொள்முதலுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மேலும் அவ்வப்போது கோஆப்டெக்ஸ் நிறுவனம் வழங்கும் குறியீட்டின்படி ஏற்றுமதி இரகங்களான மேட், ரன்னர், டைமன்ட் பாத் டவல், ஹனிகோம் பாத் டவல், மற்றும் ஆதிதிராவிடர் நலத்துறை மூலம் வழங்கப்படும் சிறப்பு திட்டங்களுக்கான இரகங்கள் உற்பத்தி செய்து விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

கரூர் மாவட்டம் வேலுச்சாமிபுரத்தில் அமைந்துள்ள எம்.எம்.76 கரூர் தொழிலியல் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் 6825 சதுர அடிபரப்பளவில் அமைந்துள்ள தொழிற்கூடத்தில் 100 தறிகள் கொண்ட சிறிய அளவிலான கைத்தறிபூங்கா அமைக்க, முதல் கட்டமாக 40 தறிகள் மற்றும் எலக்ட்ரானிக் ஜக்கார்டு மெஷின், மோட்டரைஸ்டு வார்ப்பிங் மெஷின் உள்ளிட்ட கூடுதல்உ பகரணங்கள் நிறுவி ஆண்டு முழுவதும் நெசவாளர்களுக்கு தொடர் வேலை வாய்ப்பை வழங்கி, ரூ.600 முதல் ரூ.700 வரை தினசரி கூலிபெறும் வகையில் சந்தையில் அதிக வரவேற்புள்ள வீட்டு உபயோக துணி இரகங்கள், உலகத்தரம் வாய்ந்த மேட் உள்ளிட்ட ஏற்றுமதி இரகங்கள் உற்பத்தி செய்திட திட்டமிடப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கரூர் சரகத்தை பொறுத்தவரையில் வீட்டு உபயோக துணி இரகங்கள், மதிப்பு கூடிய மற்றும் ஏற்றுமதி இரக மேட் இரகங்களுக்கு சந்தையில் தேவை அதிகரித்துள்ளது. மேலும் தற்போதைய சந்தை நிலவரப்படி கைத்தறியில் உற்பத்தி செய்யப்பட்ட சர்டிங் இரகங்களுக்கும் தேவை அதிகரித்துள்ளது.

முதற்கட்டமாக நிறுவப்படும் 40 கைத்தறிகள் மூலம் நேரடியாகவும் மறைமுகமாகவும் சுமார் 60 நெசவாளர்களுக்கு தொடர் வேலை வாய்ப்பும் நிலையான வருமானமும் வழங்குவது உறுதி செய்யப்படும். இரண்டாம் கட்டமாக மீதமுள்ள 60 கைத்தறிகள் இப்பூங்கா அமைவிடத்திற்கு அருகிலேயே வாடகை தொழிற்கூடத்தில் நிறுவி செயல்பட உத்தேசிக்கபட்டுள்ளது. முதற்கட்ட செயல்பாடுகளின் அடிப்படையில் இப்பூங்காவின் மூலம் நாளொன்றிற்கு தறி ஒன்றிற்கு சராசரியாக 8 மீட்டர் வீதம் மாதம் ஒன்றிற்கு 8,000 மீட்டர். ரூ.10.00 இவட்சம் மதிப்பீட்டில் உற்பத்தி செய்ய திட்ட மிடப்பட்டுள்ளது என அமைச்சர் ஆர்.காந்தி தெரிவித்தார்.

மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் செந்தில் பாலாஜி தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அரசின் பல்வேறு துறைகளில் சிறப்பான நிரு வாகத்தை வழங்கி இந்திய அளவில் முதன்மை மாநிலமாக திகழ்ந்து வருகிறது. குறிப்பாக முதலமைச்சர் அவர்கள் நெசவாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக சிறப்பான திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள்.

அதனடிப்படையில் இன்றைய தினம் கரூர் மாவட்டத்திலுள்ள ஜவுளி பூங்காக்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் புணரமைப்பு பணிகள் மற்றும் உற்பத்தி செய்யும் ஜவுளி ஆடைகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், கரூர்

நகரின் மைய பகுதியில் அமைந்துள்ள எம்.எம்.76 கரூர் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்க தொழிற்கூட கட்டிடத்தில் கரூர் சரகத்திற்கான சிறிய அளவிலான கைத்தறி பூங்கா அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக இத்தொழிற்கூடத்தில் 40 தறிகள் நிறுவிட திட்ட மிடப்பட்டு, இப்பூங்கா அமைப்பதற்காக தொழிற்கூட புணரமைப்பு பணிக்கு ரூ.27.57 இலட்சம் மதிப்பீட்டிலும், தறிகள் மற்றும் உபகரணங்கள் கொள்முதலுக்கு ரூ 36.50 இலட்சம் மதிப்பீட்டிலும் மற்றும் வருடாந்திர பராமரிப்பு செலவினம் (ஒரு வருடத்திற்கு) ரூ.8.60 இலட்சம் மதிப்பீட்டிலும் என மொத்தம் ரூ.51.22 இலட்சம்

மதிப்பீடு கோரிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. 75 இலட்சம் இலாபம் ஈட்டிடும் வகையில் செயல் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

மேலும் சிறிய அளவிலான ஜவுளிப்பூங்கா திட்டத்தின் கீழ் தமிழ்நாடு அரசின் முதல் தவணை மானியத்தொகை ரூபாய் 75 இலட்சம். ஓயாசிஸ் டெக்ஸ் பார்க் நிறுவனத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டின் ஜவுளித்தொழிலின் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கும். ஜவுளித் தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கும் வகையிலும். சிறிய அளவிலானஜவுளிப்பூங்கா திட்டத்தின் மூலம் தொழில் முனைவோருக்கு தகுதியான திட்டத்தொகையில் 50 விழுக்காடுத் தொகை, அதிகபட்சமாக ரூ.2.50 கோடி அளவிற்கு தமிழ்நாடு அரசின் மானியம் வழங்கப்பட்டுவருகிறது. இதற்கு ஜவுளிப் பூங்காக்கள் குறைந்தபட்சம் 2 ஏக்கர் நிலத்தையும். 3 தொழில் கூடங்களையும் கொண்டதாக இருக்க வேண்டும் என அமைச்சர் வி.செந்தில்பாலாஜி தெரிவித்தார்.

முன்னதாக தனியார் நிறுவனத்தில் பிளாஸ்டிக் பாட்டில்களை அரைக்கும் பணியினையும். காக்காவாடி ஜவுளி பூங்காவில் நடைபெற்றுவரும் கட்டுமான பணிகளையும், பிளாஸ்டிக் பாட்டில்களை அரைத்து அதில் நூல் உற்பத்தி செய்து அதன் மூலம் தயார் செய்யப்பட்டு வரும் ஜவுளி ரகங்களையும், அமைச்சர்கள் வி.செந்தில்பாலாஜி, ஆர். காந்தி பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

தொடர்ந்து கரூர் வேலுச்சாமி புரத்தில் கரூர் தொழிலியல் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க வளாகத்தில் அமைக்கப்படவுள்ள சிறிய அளவிலான கைத்தறி பூங்காவிற்கான இடத்தினையும். தியாகி குமரன் கைத்தறி நெசவாளர் கடன் கூட்டுறவு சங்கத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் ஏற்றுமதி ரகங்களையும் அமைச்சர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

இதனைத் தொடர்ந்து கரூர் ஈரோடு சாலையில் அமைந்துள்ள தனியார் உணவகத்தில் கரூர் ஜவுளி உற்பத்தியாளர் மற்றும் ஏற்றுமதியாளர் சங்கத்தினருடனான ஆலோசனைக் கூட்டம் கைத்தறி துணிநூல் அமைச்சர் ஆர்.காந்தி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் அரசு செயலர் (கைத்தறி, கைத்திறன். துணி நூல் மற்றும் கதர் துறை), வே.அமுதவல்லி, ஜவுளித் துறை இயக்குனர்.இரா. லலிதா, மாவட்ட ஆட்சியர் .மீ.தங்கவேல், கரூர் நாடாளுமன்ற உறுப்பினர் செ. ஜோதிமணி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கா.பெரோஸ் கான் அப்துல்லா, சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.மாணிக்கம் (குளித்தலை). ஆர். இளங்கோ (அரவக்குறிச்சி), க.சிவகாமசுந்தரி (கிருஷ்ணராயபுரம்), கரூர் மாநகராட்சி மேயர் வெ. கவிதா கணேசன், துணை மேயர் ப.சரவணன், மாநகராட்சி ஆணையர் கே.சுதா, மாநகராட்சி மண்டல குழு தலைவர்கள் எஸ்.பி.கனகராஜ், கோல்டுஸ்பாட் ஆர்எஸ். ராஜா, அன்பரசு. சக்திவேல், உதவி இயக்குநர்(கைத்தறி), சரவணன், துணை இயக்குநர் (டெக்டைல்ஸ்), தமிழ்செல்வி. ஜவுளி உற்பத்தியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் சங்க தலைவர் கோபாலகிருஷ்ணன், துணைத் தலைவர் ப்ரித்வி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# நாகையில் டைடல் ஜவுளி பூங்கா! தேர்வு செய்யப்பட்ட இடம்!

## அமைச்சர்கள் அன்பில் மகேஷ் பொய்யாமொழி- டி.ஆர்.பி. ராஜா நேரில் ஆய்வு! என் கௌதமன், உ. மதிவாணன் பங்கேற்பு!

நாகை,நவ.14 - நாகை மாவட்டம் நாகை ஒன்றியம் ஐவநல்லூர் ஊராட்சி செல்லூரில் டைடல் ஜவுளிப்பூங்கா அமைப்பதற்கான தேர்வு செய்யப்படவுள்ள இடத்தினை தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர். பி.ராஜா, மாவட்ட பொறுப்பு அமைச்சரும், பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். ஆய்வின் போது நாகை மாவட்ட கழக செயலாளரும், தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழக தலைவருமான தி என். கௌதமன், தாட்கோ தலைவர் உ.மதிவாணன், நாகை மாவட்ட ஆட்சித் தலைவர் ப. ஆகாஷ், நாகை சட்டமன்ற உறுப்பினர் ஜெ.முகம்மது ஷா நவாஸ், கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினர் .வி.பி.நாகை மாலி ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆய்வின் போது தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர். பி.ராஜா செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில்

உற்பத்தி மற்றும் உட்கட்டமைப்பு வளர்ச்சியில் அதிகமான தனியார் மற்றும் பொதுத்துறை முதலீட்டை ஈர்க்க வேண்டும், தமிழ்நாட்டின் அனைத்து பகுதிகளிலும் தொழில் துறை வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். அதன் மூலம் நீடித்த பொருளாதார வளர்ச்சியினை அடைந்து, அதிக அளவில் வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தந்து தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திட வேண்டும்” என்பது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நோக்கமாகும். டெல்டா பகுதியில் எந்தவொரு தொழில் வளர்ச்சியும் நீண்டகாலமாக இல்லாமல் உள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பரவலாக்கப்பட்ட வளர்ச்சியை மேம்படுத்தும் விதமாக தமிழ்நாட்டின் அனைத்து பகுதிகளிலும் தொழில் வளர்ச்சியை கொண்டு செல்லும் வகையில் படித்த இளைஞர்களுக்கும், பெண்களுக்கும் வேலை வாய்ப்பு அளிக்கும் நோக்கத்தோடு நாகப்பட்டினம் மாவட்டத்தில் ஜவுளிப் பூங்கா அமையவுள்ளது. இதையடுத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற அனைத்து அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டத்தில் நாகப்பட்டினம் மாவட்டத்தில் இங்குள்ள வளங்களை கொண்டு இதன் மூலம் சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படாமல் விவசாயிகளுக்கும், விவசாய நிலங்களுக்கும் பாதிப்பு ஏற்படா வண்ணம் தொழில் வளர்ச்சியை கொண்டுவருவது குறித்து விவாதிக்கப்பட்டது இவ்வாறு தனது பேட்டியில் அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா கூறினார்.

முன்னதாக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அனைத்து அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி .ஆர். பி.ராஜா, மாவட்ட பொறுப்பு அமைச்சரும், பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் வையாமொழி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிகளில் நாகை மாவட்ட கழக செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகத் தலைவருமான எம் கௌதமன், தாட்கோ தலைவர் உ மதிவாணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இல. மேகநாதன், க.ராஜேந்திரன், ப.கோவிந்தராஜன், க. மறைமலை, மாநில மீனவர் அணி துணை செயலாளர் ஜி.மனோகரன், கழக தீர்மானக் குழு உறுப்பினர் என்.வி. காமராஜ், மாவட்டக் கழக துணை செயலாளர்கள் சோ.ரவிச்சந்திரன், ஆரூர் மணிவண்ணன், பொருளாளர் மு.லேகநாதன், ஒன்றிய கழக செயலாளர் செல்வ.செங்குட்டுவன், மகா.குமார், சிக்கல் என். ஆனந்த், ஆர்.டி.எஸ். சரவணன், கே. பழனியப்பன் ஆதாமஸ்ஆல்வஎடிசன், சோ.பா. மலர்வண்ணன், என்.சதாசிவம், உதயம் வே. முருகையன், மங்கை எம். சங்கர், நகரக் கழக செயலாளர்கள் இரா.மாரிமுத்து மா. மீ.புகழேந்தி, எம்.ஆர்.செந்தில்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் எல்.எஸ் .ஈ. பழனியப்பன், எம். பாண்டியன், மாவட்ட ஊராட்சி தலைவர் .உமா மகேஸ்வரி சங்கர், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் பி.என்.கார்த்தி, அ.பாரி பாலன், இளம்.சுந்தர், அரவிந்த் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி ஒன்றியம் திருவாலி ஊராட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் கட்டப்பட்டுள்ள பால் சேகரிப்பு மையத்தை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் திறந்து வைத்தார். உடன் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர்.ஏ.பி.மகாபாரதி, மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் முத்து. மகேந்திரன், ஒன்றிய செயலாளர்கள் பஞ்சு.குமார், ஏ.ஜி.ஜெ. பிரபாகர், சீர்காழி ஒன்றியக் குழு தலைவர் கமலஜோதிதேவேந்திரன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் ஆனந்தன், விஜேஸ்வரன், சீர்காழி ஒன்றியக்குழு உறுப்பினர் செந்தமிழ்செல்வி ராஜேந்திரன் மற்றும் பலர் உள்ளனர்.



கடலூர் மாவட்ட தி.மு.க முன்னாள் செயலாளர் காட்டுமன்னார்கோயில் முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம்.ஆர்.கிருஷ்ணமூர்த்தி அவர்களின் 35 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு தமிழ்நாடு உயர்கல்வித்துறை அமைச்சர், கழக வர்த்தகர் அணி துணை தலைவர் கோவி.செழியன், முட்டம் இல்லத்தில் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.